1992 ஏப்ரல் 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 464, திருமதி என். சி. கனகவல்லி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்:

464—

நெசவாளர்களுக்கு குறைந்த விலையில் நூல் அளித்தல்.

*3398 திருமதி என். சி. கனகவல்லி:

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விளாத்திக்குளம் தொகுதியில் புதூர், நாகலாபுரம், கரிசல் குளம் ஆகிய ஊர்களில் நெசவுத் தொழிலையே நம்பி வாழும் நெசவாளர்களுக்கு நூல் தேவையான அளவு குறைந்த விலையில் கிடைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விளாத்திக்குளம், தொகுதியில் உள்ள புதூர், நாகலாபுரம், கரிசல்குளம் போன்ற ஊர்களிலுள்ள நெசவாளர்கள் அருகாமையில் உள்ள கூட்டுறவு சங்கங்களில் அங்கத்தினர்களாக ஆவதோ அல்லது அவர்களாகவே புதிய கூட்டுறவு சங்கத்தை அமைத்துக் கொண்டாலோ, அரசு தருகிற குறைந்த விலையிலான நூலைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி என். சி. கனகவல்லி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவுத் தொழிலாளர்களுக்குத் தேவையான அளவு நூல்கள் மானிய விலையில் கூட்டுறவுத் துறை மூலம் வழங்க அரசு முன்வருமா எனவும், இந்த ஆண்டுக்கான நூல்களை ரகம் பிரித்து நூல் வழங்க உத்தேசம் உள்ளதா எனவும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் அங்கத்தினர்களாக உள்ளவர்களுக்கு கோ-ஆப்டெக்ஸின் வாயிலாக குறைந்த விலையில் நூல் விநியோகிக்கப்பட்டு வருகிறது எனபதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 465, திரு. கே. சிங்காரம், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.